DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ALANGULAM

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | CC 01/2017 |
| Sessions | } | |
| | | Prosecution P.W. 8 |
| Deposition of witness for | { | Defence |
| | | Court |
| Name | : Manthiramoorthy | |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.12.2019

மு.வி நான் தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணியாற்றி தற்போது ஓய்வு பெற்றுள்ளேன். நான் சீதபற்பநல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது மேற்படி காவல் நிலைய குற்ற எண். 34/2016 இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) மற்றும் பெண்களை தொல்லை படுத்தி தடுக்கும் சட்டம் பிரிவு 4 பதிவு செய்த இந்த வழக்கினை 06.04.2016ம் தேதிபுலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினம் காலை 8.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் பாண்டி, மற்றும் பாலகிருஷ்ணன் முன்னிலையில் சம்பவஇடத்தையும் அதன் சற்றுப்புறத்தையும் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயாரித்து மேற்படி மகசர் சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் சாட்சிகள் வள்ளி, முத்துகுமார், மாரியப்பன், முருகேஸ்வரி பிரேமா ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சாமி என்பவரை விசாரித்து

வாக்குமூலம் பதிவு செய்தேன். 5.6.2016பின்பு வழக்கில் காயம் அடைந்த வள்ளிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சேம் சுந்தர்சிங் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச் சான்றிதழை பெற்றேன். மேலும் மாரியப்பனுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ஆஸ்மின் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச் சான்றிதழை பெற்றேன். என்னுடைய விசாரணையில் வழக்கு உண்மை என தெரிய வந்ததால் அன்றைய தினமே வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி) 323, 324, 506(2) and Sec.4 of TNPWH Actன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். முதல் தகவல் அறிக்கை அசாஆ4 ஆகவும், பார்வை மகாச் அசாஆ5 ஆகவும், வரைபடம் அசாஆ6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர் வழக்கறிஞர் ஆஜர் கு.வி செய்ய மறுக்கப்பட்டது